தலைக்கவசம்...

விபத்தில்லா விழிப்புணர்வு நாளையொட்டி, சென்னை பெருநகர போக்குவரத்து காவல் துறை சார்பில் எழும்பூர் மாநில மகளிர் மேல்நிலைப் பள்ளியில் பள்ளி மாணவர்களுக்கு விலையில்லா தலைக்கவசத்தை வியாழக்கிழமை வழங்கிய சென்னை பெருநகர போக்குவரத்து காவல் துறை ஆணையர்ஆர்.சுதாகர்.

15,000 குடும்பங்களுக்கு பட்டா வழங்க நடவடிக்கை

அமைச்சர் மா.சுப்பிரமணியன்

சென்னை, ஆக.8: சென்னை சைதாப்பேட்டை சட்டப்பேரவை தொகுதிக்குட்பட்ட திடீர்நகர், கன்னிகாபுரம் உள்ளிட்ட பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு பட்டா வழங்குவது தொடர்பாக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வியாழக்கிழமை ஆய்வு செய்தார்.

தொடர்ந்து அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் சுமார் ஒருகோடிக்கும் அதிகமான மக்கள் வசித்து வருகின்றனர். மாநகராட்சியின் 424 ச.மீ பரப்பளவில் நத்தம் புறம்போக்கு, நீர் புறம்போக்கு, பல்வேறு கோயில்களுக்கு சொந்தமான இடங்கள், அரசு புறம்போக்கு என பல்வேறு வகையான நிலங்கள் உள்ளன. இதில் ஒவ்வொரு இடத்திலும் மக்கள் குடியேறத் தொடங்கி 100 ஆண்டுகளுக்கு மேல் பட்டா ஆவணங்கள் இல்லாமல் உள்ளனர்.

இந்நிலையில் பட்டா பிரச்னைக்குதீர்வு காண விளையாட்டுத்துறை, வருவாய்த்துறை, வீட்டு வசதி வாரியத்துறை, நகர்ப்புற மேம்பாட்டுத்துறை, இந்து சமய அறநிலையத்துறை, சுகாதாரத்துறை அமைச்சர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. இந்த குழு மக்களுக்கு என்ன காரணங்களுக்காக பட்டா வழங்கப்படாமல் உள்ளது என்பது உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகள் குறித்து விரிவாக ஆலோசனை மேற்கொண்டது.

சென்னை சைதாப்பேட்டை சட்டப்பேரவைத் தொகுதிக்குள்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களுக்கு பட்டா வழங்குதல் தொடர்பாக ஆய்வு மேற்கொண்ட அந்தத் தொகுதியின் பேரவை உறுப்பினரும் அமைச்சருமான மா.சுப்பிரமணியன். உடன், மாவட்ட ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஜகடே, துணை மேயர் மு.மகேஷ்குமார்.

இதையடுத்து தற்போது சென்னையில் பட்டா வழங்கும் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. சென்னை முழுவதும் பட்டா வழங்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

அதன் தொடர்ச்சியாக சைதாப்பேட்டை தொகுதிக்குட்பட்ட அரசு பண்ணை, திடீர் நகர், அப்துல் ரசாக் தெரு, சாமியார் தோட்டம், செட்டி தோட்டம், நாகிரட்டி தோட்டம், அண்ணா கார்டன், நேரு நகர், கன்னிகாபுரம், களிக்குன்றம் மற்றும் கோட்டூர்புரம் எல்லையம்மன் கோயில் ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு பட்டா பிரச்னை இருந்ததை தொடர்ந்து சென்னை மாவட்ட ஆட்சியர் ஆய்வு மேற்கொள்ள இருக்கிறார். இந்த பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டு பட்டா இல்லாமல் இருக்கும் சுமார் 15,000 குடும்பங்களுக்கு பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அவர்.

நிகழ்வில்சென்னைமாவட்ட ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஜகடே, துணை மேயர் மு.மகேஷ் குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

வார விடுமுறை நாள்கள்: 940 சிறப்புப் பேருந்துகள் இயக்கம்

சென்னை, ஆக. 8: வார விடுமுறை தினங்களை முன்னிட்டு 940 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படவுள்ளன.

இதுகுறித்து அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் சார்பில் வெளியிடப்பட்ட செய்தி: வார இறுதி நாள்களான வெள்ளி (ஆக. 9) சனி (ஆக. 10), ஞாயிறு (ஆக. 11) ஆகிய தினங்களை முன்னிட்டு சென்னையிலிருந்து இதர இடங்களுக்கும் மற்றும் பிற இடங்களிலிருந்தும் கூடுதலான பயணிகள் தங்கள் பயணத்தை மேற்கொள்ளவுள்ளதால், தினசரி இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக சிறப்புப் பேருந்துகளை இயக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி, சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோவை, சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு வெள்ளிக்கிழமை 275 பேருந்துகளும், சனிக்கிழமை 315 பேருந்துகளும் கூடுதலாக இயக்கப்படவுள்ளன.

மேலும், சென்னை கோயம்பேட்டிலிருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஒசூர், பெங்களூரு ஆகிய இடங்களுக்கு வெள்ளிக்கிழமை 55 பேருந்துகளும், சனிக்கிழமை 55 பேருந்துகளும் இயக்கப்படவுள்ளன.

பெங்களூரு, திருப்பூர், ஈரோடு, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலிருந்தும் பல்வேறு இடங்களுக்கு 200 பேருந்துகள் இயக்கப்படவுள்ளன. இதுபோல, மாதவரத்திலிருந்து வெள்ளிக்கிழமை 20 பேருந்துகளும், சனிக்கிழமை 20 பேருந்துகளும் கூடுதலாக இயக்கப்படுகின்றன. மேலும், ஞாயிற்றுக்கிழமை சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூரு திரும்ப வசதியாக பயணிகளின் தேவைகேற்ப அனைத்து இடங்களிலிருந்தும் சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாந்த்ரா – வேளாங்கண்ணி சிறப்பு ரயில்: இன்று முன்பதிவு தொடக்கம்

சென்னை, ஆக. 8: மகாராஷ்டிர மாநிலம் பாந்த்ராவில் இருந்து வேளாங்கண்ணிக்கு ஆக.27, செப்.6 ஆகிய தேதிகளில் சிறப்பு ரயில் இயக்கப்படவுள்ளது.

வேளாங்கண்ணியில் உள்ள புனித ஆரோக்கிய அன்னை பேராலய ஆண்டு பெருவிழா ஆண்டு தோறும் ஆக.29 முதல் செப்.8-ஆம் தேதி வரை கொண்டாடப்படும். இத்திருவிழாவுக்கு நாடு முழுவதுமிருந்து லட்சக்கணக்காண பக்தர்கள் வருகை தருவர்.

இதனால் ரயில்களில் ஏற்படும் கூட்ட நெரிசலைக் குறைக்கும் வகையில் பாந்த்ரா ரயில் முனையத்தில் இருந்து வேளாங்கண்ணிக்கு சிறப்பு ரயில் இயக்கப்படவுள்ளது.

இது குறித்து தெற்கு ரயில்வே வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பாந்த்ராவில் ஆக.27, செப்.6 ஆகிய தேதிகளில் இரவு 9.20 மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில் (எண்: 09093) ஆக.29 மற்றும் செப்.5-ஆம் தேதி வேளாங்கண்ணி வந்தடையும்.

மறுமார்க்கமாக வேளாங்கண்ணியில் இருந்து ஆக.29 மற்றும் செப்.8-ஆகிய தேதிகளில் இரவு 10 மணிக்கு புறப்படும்.

இந்த ரயில் பன்வல், புணே, சோலாப்பூர், கிருஷ்ணா, ராய்ச்சூர், குண்டக்கல், கடப்பா, ரேணிகுண்டா, காட்பாடி, வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர் துறைமுகம், சிதம்பரம், சீர்காழி, மயிலாடுதுறை, திருவாரூர், நாகை வழியாக இயக்கப்படும்.

இந்த ரயிலுக்கான பயணச்சீட்டுக்கு வெள்ளிக்கிழமை (ஆக.9) முதல் முன்பதிவு செய்யலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்ப் புதல்வன் திட்ட விழா: மாணவர்கள் பார்க்க ஏற்பாடு

சென்னை, ஆக. 8: தமிழ்ப் புதல்வன் திட்டத்தை கோவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வெள்ளிக்கிழமை (ஆக.9) தொடங்கி வைக்கவுள்ள நிலையில், அதை அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் பிளஸ் 1, பிளஸ் 2 பயிலும் மாணவர்கள் பார்ப்பதற்கு பள்ளிக் கல்வித் துறை ஏற்பாடு செய்துள்ளது.

அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் 6 முதல் பிளஸ் 2 வகுப்பு வரை படித்த மாணவர்களின் உயர்கல்வி சேர்க்கையை உயர்த்த தமிழ்ப் புதல்வன் என்ற திட்டம் தொடங்கி வைக்கப்பட உள்ளது. இதே போல் மாணவிகள் பயன்பெறும் வகையில் புதுமைப் பெண் திட்டம் ஏற்கெனவே நடைமுறையில் உள்ளது குறிப்பிடத் தக்கது.

அதன்படி, தமிழ்ப் புதல்வன் திட்டம் மூலம் 6 முதல் பிளஸ் 2 வகுப்பு வரை படித்த மாணவர்களுக்கு மாதம் ரூ. 1,000 வழங்கப்படவுள்ளது. இந்தத் திட்டத்தின் தொடக்க விழா கோவையில் வெள்ளிக்கிழமை (ஆக.9) நடைபெறவுள்ளது.

இந்த விழாவை அரசு, அரசு உதவிபெறும் மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கும் பிளஸ் 1, பிளஸ் 2 வகுப்பு அனைத்து மாணவர்களும் பார்க்கும் வகையில் மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர்களுடன் கலந்தாலோசித்து பள்ளி ஆசிரியர்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். அவ்வாறு ஏற்பாடு செய்ததையும், மாணவர்கள் அதன் மூலம் தொடக்க நிகழ்ச்சியை கண்டுகளித்த அறிக்கையையும் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்கள் அனுப்பி வைக்க வேண்டும் என பள்ளிக் கல்வித் துறை உத்தரவிட்டுள்ளது.

வரி விளம்பரம்

PUBLIC NOTICE

CHANGE OF NAME

CHANGE OF NAME

I, **LAKSHMINARAYANAN P.B** S/o. P.L. Balasubramanian, Place of Birth: 16.04.1992 District of Birth: Palakkad -Kerala, residing at 16A, Vrindavan 1st Floor, Aranganathan 4th Street, Pammal, Chennai – 600 075, shall henceforth be known as **GIRISH ARYAN.**

LAKSHMINARAYANAN P.B

CHANGE OF NAME

I, **A. LINDA REETA WILSON,** wife of Thiru Elango Yeasaiyan, born on 23rd January 1995, (District of Birth: Chennai), residing at No. 305, M.P.M. Street, Sanjay Nagar, Vyasarpadi, Chennai-600 039, shall henceforth be known as **LINDA REETA ELANGO**

A. Linda Reeta Wilson

Chennai, 19th July 2024.

இண்டியன் பேங்க் இந்தியன் வங்கி

இலாஹாபாத் அலகாபாத்

மண்டல அலுவலகம், காஞ்சிபுரம்

வங்கி கிளைக்கு புதிய வாடகை கட்டிடம் தேவை

இந்தியன் வங்கி, எண்ணூர் உள்ள கிளைக்கு புதிய வாடகை கட்டிடம் தேவைப்படுவதால் 1400 சதுர அடி வரையில், தரைத்தளத்தில் பார்க்கிங் வசதியுடன் 10 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விட விரும்புபவர்கள்/ கட்டுமானத்தில் உள்ள கட்டிடத்தின் கட்டிட உரிமையாளர்கள் டெண்டரில் பங்கேற்கலாம்.

ஏல முறையில் (2-வகையான ஏல முறை தொழில் நுட்ப மற்றும் நிதி ஏலம்) தகுதியுள்ளவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். டெண்டரில் பங்கேற்க விரும்புபவர்கள் கட்டிட உரிமையாளர்கள் டெண்டர் படிவத்தினை 09.08.2024 முதல் 23.08.2024 வரை ரூ.250/-க (திரும்ப வர முடியாத) INDIAN BANK என்ற பெயரில் வரைவோலை மூலம் செலுத்தி மேற்கண்ட கிளைகளில் விண்ணப்பத்தினை பெற்றுக் கொண்டு சமர்ப்பிக்கலாம்.

சமர்ப்பிக்க கடைசி தேதி மற்றும் நேரம் : 23.08.2024 மதியம் 1.00 மணிக்கு முன்னர்

டெண்டர் திறப்பு தேதி மற்றும் நேரம் : 23.08.2024 மதியம் 3.00 மணிக்கு

ஒப்பந்தப்புள்ளி விவரங்களை இந்தியன் வங்கி, SCSVMV கிளை/இந்தியன் வங்கி மண்டல அலுவலகம் காஞ்சிபுரத்தில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

எந்தவொரு காரணத்தையும் கூறாமல் அனைத்து விண்ணப்பங்களையும் நிராகரிக்க வங்கிக்கு முழு உரிமை உண்டு.

மண்டல மேலாளர்/துணை பொது மேலாளர், இந்தியன் வங்கி, மண்டல அலுவலகம், காஞ்சிபுரம்.

சுந்தரம் மியூச்சுவல் — சுந்தரம் பைனான்ஸ் குரூப் —

அறிவிப்பு – உடன் – சேர்க்கை – திட்டத் தகவல் ஆவணம் (SID) / முக்கிய தகவல் குறிப்பாணை (KIM) / சுந்தரம் மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்களுக்கான அறிக்கை

அ) கிளை அலுவலகம் மூடல்:

முதலீட்டாளர்கள் / யூனிட் வைத்திருப்பவர்கள் சுந்தரம் அசெட் மேனேஜ்மெண்ட் கிளை மூடப்பட்டதைக் குறித்துக்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள். இது சுந்தரம் மியூச்சுவல் ஃபண்ட்களுக்கான பரிவர்த்தனைகளை ஏற்றுக்கொள்ளும் அதிகாரம்பூர்வ மையமாகும்

கிளை பெயர்	புதிய முகவரி	நடைமுறைப்படுத்திய தேதி
கொல்கத்தா சேவை கிளை	சுந்தரம் அசெட் மேனேஜ்மெண்ட் கம்பெனி லிமிடெட் P–38 பிரின்ஸ்ப் தெரு, தரை தளம், ஆஃப் பென்டிங்க் தெரு, (ஓரியண்ட் சினிமாவுக்கு எதிரில்), கொல்கத்தா–700072.	ஆகஸ்ட் 14, 2024

திட்டத் தகவல் ஆவணம் (கள்) / முக்கிய தகவல் குறிப்பாணை (கள்) / கூடுதல் தகவல் அறிக்கையின் மற்ற அனைத்து விதிமுறைகளும் நிபந்தனைகளும் மாறாமல் இருக்கும்.

சுந்தரம் மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்களின் திட்டத் தகவல் ஆவணம் (SID) / முக்கிய தகவல் குறிப்பாணை (KIM) / கூடுதல் தகவலின் (SAI) அறிக்கை அவ்வப்போது திருத்தப்பட்டு அறிக்கையின் ஒருங்கிணைந்த பகுதியாக இந்த சேர்க்கை அமைகிறது.

சுந்தரம் அசெட் மேனேஜ்மெண்ட் கம்பெனி லிமிடெட்டுக்காக,
ரா. அஜித் குமார்
செயலாளர் & கம்பிளையன்ஸ் அதிகாரி

இடம்: சென்னை
தேதி: ஆகஸ்ட் 09, 2024

மேலும் தகவலுக்கு, தொடர்பு கொள்ளவும்:
சுந்தரம் அசெட் மேனேஜ்மெண்ட் கம்பெனி லிமிடெட்
(சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் முதலீட்டு மேலாளர்)
CIN: U93090TN1996PLC034615

கார்ப்பரேட் அலுவலகம் 1வது & 2வது தளம், சுந்தரம் டவர்ஸ், 46, ஓல்டர்ஸ் சாலை, நாயர்பேட்டை, சென்னை 600 014.
தொடர்புக்கு: 1860 425 7237 (இந்தியா), 044 4083 1500 (வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கு)
ஃபேக்ஸ்: +91 44 2841 8108. www.sundarammutual.com
பதிவு அலுவலகம்: எண். 21, பட்டுலோஸ் சாலை, சென்னை - 600 002.

மியூச்சுவல் ஃபண்ட் முதலீடுகள் சந்தை அபாயங்களுக்கு உட்பட்டவை, திட்டம் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் கவனமாக படிக்கவும்.

டிவிஎஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்

(முன்னர் சுந்தரம்-கிளேட்டன் லிமிடெட் என்று அழைக்கப்பட்டது)

பதிவு அலுவலகம் : "சைதன்யா", எண்.12, காதர் நவாஸ் கான் சாலை, நுங்கம்பாக்கம், சென்னை 600 006.
தொலைபேசி : 044 - 28332115. இணையதளம் : www.tvsholdings.com மின்னஞ்சல் : corpsec@tvsholdings.com
CIN : L35999TN1962PLC004792

30 ஜூன் 2024 அன்று முடிவடைந்த காலாண்டுக்கான தனித்த மற்றும் ஒருங்கிணைத்த தணிக்கை செய்யப்படாத நிதிநிலை முடிவுகள்

(ரூ. கோடிகளில்)

வ. எண்	விவரங்கள்	தனித்தது			ஒருங்கிணைந்தது		
		முடிவடைந்த காலாண்டு		முடிவடைந்த ஆண்டு	முடிவடைந்த காலாண்டு		முடிவடைந்த ஆண்டு
		30.06.2024	30.06.2023	31.03.2024	30.06.2024	30.06.2023	31.03.2024
		(தணிக்கை செய்யப்படாதது)		(தணிக்கை செய்யப்பட்டது)	(தணிக்கை செய்யப்படாதது)		(தணிக்கை செய்யப்பட்டது)
1	மொத்த வருமானம்	136.37	589.02	1,646.56	10,483.12	9,587.99	40,282.02
2	விதிவிலக்கான வகைகள் மற்றும் வரிக்கு முன் நிகர லாபம் / (நஷ்டம்)	15.02	48.02	415.19	732.28	614.04	2,791.49
3	விதிவிலக்கான வகைகளுக்குப் பின் வரிக்கு முன் நிகர லாபம் / (நஷ்டம்)	15.02	44.69	410.12	732.28	610.71	2,786.42
4	விதிவிலக்கான வகைகள் மற்றும் வரிக்கு பின் நிகர லாபம் / (நஷ்டம்)	12.82	27.95	338.74	481.03	409.41	1,782.38
5	நடப்புக் காலத்திற்கான விரிவான மொத்த வருமானம் [நடப்புக் காலத்திற்கான வரிக்குப் பின் லாபம் மற்றும் (வரிக்குப் பின்) இதர விரிவான வருமானம்]	12.80	25.69	336.08	451.09	359.35	1,728.28
6	செலுத்தப்பட்ட சமபங்கு மூலதனம் (முகமதிப்பு ஒவ்வொரு பங்கிற்கும் ரூ.5/-)	10.12	10.12	10.12	10.12	10.12	10.12
7	ரிசர்வுகள் (மறு மதிப்பீடு ரிசர்வுகள் நீங்கலாக)			1,439.45			2,829.95
8	பங்குகளின் பிரீமியம்	36.44	36.42	36.42	36.44	36.42	36.42
9	நிகர மதிப்பு	1453.12	746.14	1,440.37	2,809.37	3,023.55	2,619.28
10	நிலுவையில் உள்ள கடன் (மாற்ற முடியாத திருப்பி எடுக்கக்கூடிய விருப்ப பங்குகளை தவிர்த்து)	643.64	770.55	550.00	26,958.06	25,842.69	26,232.48
11	நிலுவையில் உள்ள திருப்பி எடுக்கக்கூடிய முன்னுரிமை பங்குகள்	-	2346.92	-	-	2,346.92	-
12	கடன் சம விகிதாசாரம் (விதிவிலக்கான வகைகள் உட்பட)	0.39	1.01	0.31	7.70	6.41	8.24
13	பங்கு ஒன்றிற்கான சம்பாத்தியம் (முக மதிப்பு ரூ.5/- ஒரு பங்குக்கு) (ஆண்டு விகிதம் செய்யப்படவில்லை)						
	(அ) அடிப்படை (ரூபாயில்)	6.34	13.81	167.43	107.20	97.09	395.60
	(ஆ) டைல்யூட்டட் (ரூபாயில்)	6.34	13.81	167.43	107.20	97.09	395.60
14	மீட்கக்கூடிய மூதன ஒதுக்கீடு	- பொருந்தாது -					
15	மீட்கக்கூடிய கடன் பத்திர ஒதுக்கீடு	- பொருந்தாது -					
16	கடன் சேவை அளிப்பு விகிதாசாரம் (NBFC துணை நிறுவனம் நீங்கலாக) (மடங்கு)	NA	2.73	NA	NA	1.17	NA
17	வட்டி சேவை அளிப்பு விகிதாசாரம் (NBFC துணை நிறுவனம் நீங்கலாக) (மடங்கு)	NA	6.34	NA	NA	8.22	NA
18	நடப்பு விகிதம் (மடங்கு)	NA	0.87	NA	NA	1.01	NA
19	நீண்ட கால கடன் விகிதம் செலுத்தப்பட்டு மூதனத்திற்கு (மடங்கு)	NA	-	NA	NA	3.08	NA
20	கணக்குகளின் மூலம் பெறவேண்டியவற்றிற்கு வராக்கடன் விகிதம் (மடங்கு)	NA	-	NA	NA	-	NA
21	நடப்பு பொறுப்புகளின் விகிதம் (மடங்கு)	NA	0.54	NA	NA	0.61	NA
22	மொத்த கடனுக்கு மொத்த சொத்துக்களின் விகிதம் (மடங்கு)	0.30	0.38	0.23	0.59	0.61	0.59
23	கடனாளிகளின் கழற்சி விகிதம் (மடங்கு)	NA	7.54	NA	NA	22.96	NA
24	சரக்கிருப்பு கழற்சி விகிதம் (மடங்கு)	NA	3.53	NA	NA	7.14	NA
25	செலுத்தப்பட்டு இலாப விகிதம் (%)	NA	12.71	NA	NA	13.16	NA
26	நிகர இலாப விகிதம் (%)	9.40	4.74	20.57	4.59	4.38	4.44

குறிப்புகள் :

1. மேற்கண்ட நிதிநிலை முடிவுகள் 2015ல் வருடத்தைய செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளிவீடு தேவைகள்) விதிகள், விதி 33 மற்றும் 52ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள விரிவான நிதிநிலை முடிவுகளின் சுருக்கம் ஆகும். நிதிநிலை முடிவுகளின் முழு வடிவம் ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகளின் இணையதளம் (www.bseindia.com மற்றும் www.nseindia.com) மற்றும் கம்பெனியின் இணையதளம் (www.tvsholdings.com) ஆகியவற்றிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.
2. மாண்புமிகு தேசிய நிறுவன சட்டத் தீர்ப்பாயம், சென்னையில் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின்படி, நிறுவனத்தின் பட கால்டிங் வியாபாரம் ஆகஸ்ட் 10, 2023 அன்று பிரிக்கப்பட்டது. அதன்படி, ஜூன் 30, 2023ல் முடிவடைந்த காலாண்டிற்கான முடிவுகள் வழங்கப்பட்ட புள்ளிவிவரங்கள் மற்ற காலங்களுடன் ஒப்பிட முடியாது.
3. முந்தைய காலத்திற்கான தொகைகள் நடப்புக் காலத்தின் தேவைக்கேற்றவாறு மறுவரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

இடம் : பெங்களூரு
தேதி : 08.08.2024

டிவிஎஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்டிற்காக
ஒப்பம்/-
வேணு சீனிவாசன்
தலைவர்

அசல் நிலம்/சொத்து ஆவணம் காணவில்லை

பழைய எண். 8B, புதிய எண்:27A, கக்கன் தெரு, தாம்பரம் மேற்கு, செங்கல்பட்டு மாவட்டம், தமிழ்நாடு - 600045 என்ற முகவரியில் வசித்து வரும் திரு. சுதர்சனம் வாக்காளர் அடையான அட்டை எண். ZUQ1273234 , த/பெ. பாலாகப்பிரமணியம், சுமார் 46 வயதுடைய நான் இதன் மூலம் பொது மக்களுக்கு தெரிவித்துக் கொள்வது யாதெனில் செய்யூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் 31.03.1997 அன்று பதிவு செய்யப்பட்ட எனக்கு / எங்களுக்கு சொந்தமான அசையா சொத்தின் மூல ஆவணம் எண் 630 / 1997 , S.No. 612/1 பகுதி, மனை எண். 185, 29.07.2024 தேதி அன்று தாம்பரம் வீட்டில் இருந்து அருகில் உள்ள Xerox கடைக்கு செல்லும் வழியில் தொலைந்து விட்டது. யாரேனும் அதனை கண்டுபிடித்தால் எனது 9910099205 / 9840534300 கைப்பேசி எண்ணிற்கு அல்லது கீழ்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

SUDHARSANAM MANNI BALASUBRAMANIAM
பழைய எண். 8B, புதிய எண்:27A, கக்கன் தெரு, தாம்பரம் மேற்கு,
செங்கல்பட்டு மாவட்டம், தமிழ்நாடு - 600045

கண்டெய்னர் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிட்.
CONTAINER CORPORATION OF INDIA LTD.
ஒரு நவரத்னா நிறுவனம் (ஓர் இந்திய அரசு நிறுவனம்)
A Navratna Company (A Govt. of India Undertaking)

எண். MSTC/SRO/CONCOR/2/24-25/21066, 21068,21069&21070 நாள்: 09-08-2024

இணையவழி பொது ஏல விற்பனை

CONCOR நிறுவனமானது வட்டாரம் - III (தெற்கு)-இல் உள்ள CONCOR-இன் முனையங்களில் (சென்னை, பெங்களூரு, ஹைதராபாத் & விசாக்) பெற்றுக்கொள்ளப்படாத / கோரப்படாத சரக்குகள், சேதமடைந்த உள்நாட்டு கன்டெய்னர்கள், உள்நாட்டு சரக்கு ஆகியவற்றை இணையவழி ஏலத்தில் விற்பனை செய்திட விலைப்புள்ளிகளை வரவேற்கிறது. இறக்குமதி சரக்குக்கான பொது ஏலமானது, இறக்குமதியாளர் / சரக்கு பெறுபவருக்கு மேற்கொண்டு எந்த அறிவிப்புமின்றி, சுங்க சட்டம் 1962 ன் பிரிவு 48 ன் கீழான விதிமுறைகளின்படி நற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேல்முறையீட்டிலுள்ள அல்லது மாண்பமை நீதிமன்றங்களில் உள்ள வழக்குகளில் சிக்கியுள்ள பொருள்கள் விற்பனைக்கு எதிராக எந்தேனும் செல்லுபடியாகத்தக்க ஆட்சேபணைகள் இருப்பின், அவற்றை CONCOR -க்கு இந்த அறிவிப்பு வழங்கப்பட்ட தேதியிலிருந்து 07 நாள்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும். தவறும் பட்சத்தில், இறக்குமதியாளர் / சரக்கு பெறுபவருக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றும் சரக்குகளை மேற்கொண்டு எந்த அறிவிப்புமின்றி விற்றுக்கொள்ளலாம் எனவும் தீர்மானிக்கப்படும் . இணையவழி ஏலமானது M/s. CONCOR -இன் ஒர் அங்கீகரிக்கப்பட்ட மின் - வர்த்தக சேவைதாரர் M/s. MSTC Ltd., வாயிலாக நடத்தப்படும். கன்டெய்னர்கள் / சரக்குகள் ஆகியவற்றை 09.08.2024 முதல் 19.08.2024 வரை அனைத்து வேலை நாள்களிலும் / வேலை நேரத்திலும் அந்தந்த CONCOR முனையங்களில் ஆய்வு செய்து கொள்ளலாம். இணையவழி ஏலம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள நாள்: 20.08.2024. விபரங்களுக்கு தயவு கூர்ந்து www.concorindia.com அல்லது eprocure.gov.in அல்லது www.mstcindia.co.in ஆகியவற்றைப் பார்வையிடவும் அல்லது தொடர்பு கொள்ளுங்கள்: CONCOR தொலைபேசி எண்-044-26482192 அல்லது MSTC Ltd., தொலைபேசி எண்- 044-25219004, மின்னஞ்சல்: mhjain@mstcindia.co.in ல் தொடர்பு கொள்ளவும். மேலும், ஏதேனும் திருத்தம் இருப்பின் அது, மேற்படி இணையத்தளங்களில் மட்டுமே வெளியிடப்படும் என்பதை தயவு கூர்ந்து அறியவும்.

ஒப்பம்/- வட்டார மேலாளர்-III (தெற்கு)

கனரா வங்கி केनरा बैंक Canara Bank
(A GOVERNMENT OF INDIA UNDERTAKING)
சிண்டிகேட் Syndicate

General Administration Section, Circle Office, Chennai
No: 524, Anna Salai, Teynampet, Chennai - 600 018

RFP NO: GA/CHN/SOLAR/05/2024-2025 DT: 09.08.2024
Rfp For Supply, Installation, Testing, Commissioning & Maintenance Of 59kWp On- Grid Rooftop Solar Photo Voltaic Power Plant at Chennai Locations

Sr No	Name Address & Details of the Premises	Approx Capacity
1	Canara Bank, Audaiappa Naicken Street, George Town, Chennai	20 kWp
2	Candheep, Raghavaiha Road, T Nagar, Chennai	8 kWp
3	Shreyas Apartment, Sambandham Road, T Nagar, Chennai	3 kWp
4	Canjyothi Apartments, West Sivan Kovil St, Vadapalani, Chennai	8 kWp
5	Canara Bank, Gunidy, GST Road, Annasalai Chennai	15 kWp
6	Syndicate House, Avvai Shanmugam Salai, Gopalapuram, Chennai	5 kWp

The details are published in the Bank's Website: http://www.canarabank.com /tenders.aspx & Govt portal http://eprocure.gov.in. The necessary application forms may be downloaded from the Bank's Website & Govt portal. Last date for submission of tender documents at the above mentioned office is 29.08.2024 upto 3.00 P.M.
Further, communications, corrigendum, amendments, if any, will be hosted in Bank's website only.

Place: Chennai
Date : 09.08.2024
SD/-
ASSISTANT GENERAL MANAGER

பொது அறிவிப்பு

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், ஏலியம்பேடு கிராமத்தில் உள்ள நிலங்களின் விஸ்தீரணம் ஏக்கர் 0.46 சென்ட் மற்றும் ஏக்கர் 0.35 சென்ட் அதன் சர்வே எண்கள் .11/3B & 37/6 (சொத்து விவரம்) நிலங்களின் உரிமையாளர் மெர்சஸ். ஓம் சக்தி ஏஜென்சீஸ் (மெட்ராஸ்) பிரைவேட் லிமிடெட் எனும் நிறுவனத்திடமிருந்து எங்கள் கட்சிக்காரர் நிலத்தை பரிவர்த்தனை செய்ய தீர்மானித்துள்ளார்.

எனவே மேலே குறிப்பிட்டுள்ள சொத்து மீது எவருக்கேனும் (தனி நபர்கள்/ வங்கிகள்/ சங்கங்கள்/நிதி நிறுவனங்கள்) எவ்விதமான உரிமையும், அதிகாரமும், பாத்தியமும் அதில் ஒரு கோரிக்கையும் இருந்தால் அதாவது அதில் ஒப்பந்தம், விற்பனை, உரிமை மாற்றம், உயில், ஒப்படைப்பு, பரிமாற்றம், அடமானம், வாடகை, குத்தகை, பரம்பரையாக உரிமை, தானம், பராமரிப்பு, தட பாத்தியம், அபிவிருத்தி உரிமை, அனுபோக பொறுப்பு, அனுபோக வாடகை ஒப்பந்தம், போன்றவைகள் எவரேனும் பெற்றிருந்தால் அவற்றின் உரிமை நிரூபிக்க தேவையான ஆவணங்களுடன் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 15 தினங்களுக்குள் கீழ்கண்ட முகவரிக்கு அணுக வேண்டும். அவ்வாறு எவரேனும் அவர்களின் உரிமையை 15 தினங்களுக்குள் தெரிவிக்காவிட்டால் அவர்கள் தங்களுடைய உரிமையை விட்டுக் கொடுத்ததாக கருதப்பட்டு எங்களது கட்சிக்காரர் மேலே குறிப்பிட்டுள்ள உரிமையாளரிடமிருந்து நிலத்தை பரிவர்த்தனை செய்ய எவ்வித ஆட்சேபனையும் இல்லை என கருதப்படும்.

எங்களது கட்சிக்காரர் சார்பாக
ஃபாக்ஸ் மண்டல் & அசோசியேட்ஸ்,
வழக்கறிஞர்கள் & வழக்குரைஞர்கள்,
எஃப்.